

2020ம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கை

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்

பொருளடக்கம்

பக்க எண்

சுருக்கங்கள்..... **03**

01 - நீதிச்சேவை ஆணைக்குழுவின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு..... 04-10

02 - நிறுவனத்தின் செயற்திறனை உயர்த்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்..... 11-16

03 - 2020 ஆம் ஆண்டிற்கான நிதி மதிப்பாய்வு அறிக்கை..... 17-30

04 - செயல்திறன் குறிகாட்டிகள்..... 31-33

05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயற்திறன்..... 34-35

06 - நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஊழியர்களின் சுருக்கம் 36-38

07 - இணக்க அறிக்கை..... 39-48

சுருக்கங்கள்

01. உ. செயலாளர்	- உதவி செயலாளர்
02. உள்.கண	- கணக்காய்வாளர் உள்ளக
03. உ. புல. அதிகாரி -	உதவி புலனாய்வு அதிகாரி
04. நிர்வாக அதி.	- நிர்வாக அதிகாரி
05. நிகழ்ச்சித்திட்ட . உ	- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
06. நீதி. மொழி	- நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்
07. த.தொ.அதி.	- தகவல் தொழில்நுட்ப அதிகாரி
08. நீதி.த	- நீதிமன்ற தட்டெழுத்தாளர்
09. நீதி.சு	- நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்
10. நீதி. உரை	- நீதிமன்ற உரைபெயர்ப்பாளர்
11. அ.மு.உ.	- அரச முகாமைத்துவ உதவியாளர்
12. நீதி.பு.க	- நீதிமன்ற புத்தக கட்டுனர்
13. அ.உ	- அலுவலக உதவியாளர்

பகுதி - I

நீதிச்சேவை ஆணைக்குழுவின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு

எங்களைப் பற்றி

1.1 நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம் (JSC)

அரசியலமைப்பின் பிரிவு 111 (ஈ) சட்டத்தினால் நீதிச்சேவை ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களின் சுயாதீனத்தன்மையினை பாதுகாக்கும் நோக்கிலேயே சுயாதீனமான ஆணைக்குழு என்ற வகையில் நீதிச்சேவை ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் பதவி வழியாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராவதோடு மேல் நீதிமன்ற நீதிபதிகள் இருவர் அதிமேதகு ஜனாதிபதியினால் அங்கத்தவர்களாக நியமிக்கப்படுவர். நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுவதோடு அச்செயலாளர் முதல்நிலை நீதிமன்ற நீதிபதிகளிடமிருந்து நியமனம் பெறுவார்.

29.04.2019 முதல் நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக கௌரவ பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய செயல்படுகின்றார், மற்றும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளான கௌரவ எல். டி. பி.தெஹிதெனிய, கௌரவ பி.பி.அலுவிகார பிசி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக செயல்படுகின்றனர். நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களாக திரு எச்.எஸ். சோமரத்ன, மேல் நீதிமன்ற நீதிபதி (சிறப்பு வகுப்பு) அவர்களும் சிரேஷ்ட உதவி செயலாளர்களாக திரு பி.எம்.டி. பண்டார, மாவட்ட நீதிபதி (முதலாம் வகுப்பு தரம் **I**), திரு டி.எம்.டி.சி பண்டார, மாவட்ட நீதிபதி (முதலாம் வகுப்பு தரம் **I**) மற்றும் செல்வி. ஆனந்தி கனகரத்தினம் மாவட்ட நீதிபதி (முதலாம் வகுப்பு தரம் **II**) அவர்களும் கடமையாற்றுவதோடு கௌரவ பிரதம நீதியரசின் செயலாளராக செல்வி. ஆனந்தி கனகரத்தினம் அவர்கள் செயல்படுகின்றார்.

2020ம் ஆண்டில் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் பணிக்குழாமானது நிறைவேற்று அதிகாரிகள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் சிற்றூழியர்களை கொண்ட பணிக்குழாமாகும்.

தேவையற்ற காலதாமதம் இன்றி வினைத்திறனான நீதி வழங்கலை அடைவதற்காகவும் மற்றும் நீதி நிர்வாகத்தின் செயல்முறையை தாமதமின்றி வலுப்படுத்துவதற்காகவும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பல்வேறு நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவ்வாறு இயக்கப்படுகின்ற நீதிமன்றங்களின் பட்டியல் பின்வருமாறு ,

I.	நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம்	- 02
II.	வர்த்தக மேல் நீதிமன்றம் மன்றங்கள் அடங்கும்)	- 01 (இதில் மூன்று
III.	மாகாண மேல் நீதிமன்றங்கள்	- 33
IV.	குடியியல் மேல்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்	- 22
V.	மாவட்ட நீதிமன்றங்கள்	- 31
VI.	மாவட்ட / நீதவான் நீதிமன்றங்கள்	- 52
VII.	நீதவான் நீதிமன்றங்கள்	- 49
VIII.	சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள்	- 02
IX.	தொழில் நியாய சபை	- 37

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் கீழ் செயற்படும் பணிக்குழாமானது, நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பணிகளையும் கடமைகளையும் சட்டப்படி செய்வதற்கு முழு ஆதரவையும் வழங்குகிறது.

நீதித்துறை சுயாதீனத்தை பாதுகாப்பதும் அதேவேளை, நிறைவேற்று மற்றும் சட்ட சபைகளுடன் கூடிய தடைளையும் சமநிலையையும் பேணுவதன் மூலம் இலங்கையின் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், விரைவுபடுத்தவும் நீதிச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

1.2 நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் முக்கிய பணிகள்

- மேல் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் மற்றும் ஒழுக்கக் நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்தல்.

- மேல் நீதிமன்ற நீதிபதிகளின் இடமாற்றம் மற்றும் பயிற்சி வழங்கல் .

- முதல் நிலை நீதிமன்ற நீதிபதிகளான மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், மற்றும் தொழில் நியாய மன்றின் தலைவர்கள் தொடர்பான நியமனங்கள்,பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு.

- நீதிமன்ற உத்தியோகத்தர்களாக சேவையாற்றுகின்ற அட்டவணைப்படுத்தப்பட்ட அரச அலுவலகர் சேவையின் அலுவலகர்களின் நியமனங்கள், பதவியுயர்வு, இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அரசியலமைப்பின் கட்டளைக்மைய முழு நீதிமன்ற அமைப்பையும் முறையாக மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமை செய்தல்.

- 1934 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டப்படி வேலையாளர் நட்டஈட்டுஆணையாளர்அலுவலகத்திற்கு ஆணையாளர் மற்றும் பிரதி/ உதவி ஆணையாளரை நியமித்தல். இந்த அலுவலகத்தின் பிரதான பணி, தொழில் புரிந்துகொண்டிருக்கும்போது விபத்துக்களுக்கு முகம்கொடுக்கின்ற வேலையாளர்களின் நட்டஈட்டுக் கோரிக்கையை விசாரணை செய்வதாகும்.

- முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் முஸ்லிம் சமூகத்தின் குடும்ப நீதிமன்ற அதிகார வரம்பைப் பிரயோகிக்கும் குவாஸிகளின் நியமனம், பயிற்சி மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு.

- 2002 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீட்டு நீதாய சபையின் சட்டத்தின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நீதாய சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம், நிருவாக மேன்முறையீட்டு நீதாய சபை என்பது, பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு வின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு அமைப்பாகும்.

- 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்திச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் விவசாய மீளாய்வு ச் சபைகளை ஸ்தாபிப்பதற்கான நோக்கத்திற்காக 09 நபர்களுக்கு மிகாதவர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்தல். விவசாய மீளாய்வுச் சபையானது விவசாயச் சபையின் தீர்ப்புகள் தொடர்பான மேல்முறையீட்டு அமைப்பாகும்.

- 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமைச் சட்டத்தின் படி மாவட்ட நீதிமன்றங்கள்,நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை சேவையின் அதிகாரிகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு பதிலளிக்க தகவல் அலுவலகர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளாக செயற்படுதல்.
- 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய காணி சுவீகரிப்பு மீளாய்வு சபையின் தவிசாளர் உட்பட 16 உறுப்பினர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
- 2000 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம் மற்றும் 2011 இன் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் 09 ஆம் இலக்கப்படி, பிள்ளைகளால் கவனிக்கப்படாத பெற்றோர்களின் பராமரிப்புப் பயன்பாடுகளை தீர்மானிக்கும் முதியோர் பராமரிப்புச் சபையின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களை நியமித்தல்.

1.3 நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் நிறுவன கட்டமைப்பு

நீதிச்சேவை ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பு

தலைமை நீதிபதி
(தலைவர்)


↓

உயர் நீதிமன்றத்தின் இரண்டு சிரேஷ்ட நீதிபதிகள்
(ஏனைய நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்)


↓

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்

நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் நிர்வாக அமைப்பு



நீதிமன்ற முறைமையின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



பகுதி - II

நிறுவனத்தின் செயற்திறனை உயர்த்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

2.1 2020 ஆம் ஆண்டில் நீதியை நிலைநிறுத்தும் செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்கும், வினைத்திறன் மிக்கதாக்குவதற்கும், துரிதப்படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் அடைவுகள்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் நீதியை நிலைநிறுத்தும் நிறுவனங்கள் அதனோடு தொடர்புடைய நிறுவனங்களுடன் நற்தொடர்பை ஏற்படுத்துவதினூடாக, நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீதியை நிலைநிறுத்தும் செயற்பாட்டினை பலப்படுத்துவதற்கும் அவற்றை தாமதமின்றி செயற்படுத்துவதற்கும் தேவையான முன்னெடுப்புகளையும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

- 2020 ஆம் ஆண்டின் முதன்மை பணியாக காணப்பட்டது நாட்டினில் நிலவிய **COVID 19** நோய்த் தொற்றுக்கு மத்தியில் சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்.

- **COVID 19** தொற்றுநோய் நிலைமை உட்பட பல்வேறு தடைகளுக்கு முகங்கொடுத்து, நீதிச் சேவை ஆணைக்குழு, மேற்கூறியவாறு செயற்படுவதற்குத் தேவையான முடிவுகளை எடுப்பதற்கு ஆணைக்குழு கூட்டங்களை பௌதீக ரீதியாகவும் தொலைதூரமாகவும் (**Physically and Remotely**) தொடர்ந்து நடத்துதல்.

- நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் நாட்டின் அனைத்து நீதிமன்றங்களுக்கும், **COVID 19** தொற்றுநோய் நிலைமையின் கீழ் நீதித்துறை விவகாரங்களை எவ்வாறு நடத்துவது என்பதைக் குறிப்பிடும் சுற்றறிக்கைகளை (10 க்குக் குறையாதது) அவ்வப்போது வெளியிடுதல் மற்றும் அந்தச் சுற்றறிக்கைகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல். முழு காலகட்டத்திலும் முடிந்தவரை, விவகாரங்களை பராமரிக்க தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் அது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- சிறைச்சாலைகளில் **COVID 19** தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க, சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைக்க, இது தொடர்பாக நீதிபதிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

- **COVID 19** தொற்றுநோய் சூழ்நிலையில், நீதிச்சேவை ஆணைக்குழுவின் எல்லைக்குள் எடுக்கக்கூடிய முடிவுகளை எடுப்பதன் மூலம், நடைமுறைகளை தொலைதூரத்தில் (Remote Court Hearing) நடத்துவது மற்றும் அந்த நோக்கத்திற்காக முடிந்தவரை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். (Extending remand of the prison inmates remotely))

- தொற்றுநோய் நிலைமை காரணமாக, நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலகம் தீவிரமாக தலையிட்டு நீதித்துறை தொடர்பான பிற தரப்பினருக்கு (வழக்கறிஞர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிறை அதிகாரிகள், மரண விசாரணை அதிகாரிகள்) ஏற்படும் பிரச்சினைகளைக் குறைக்க பங்களிக்கின்றன.


இதற்கு மேலதிகமாக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் 2020 ஜனவரி மாதம் 01ஆம் திகதியில் இருந்து 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையுள்ள காலத்தில் நீதிச் சேவை ஆணைக்குழு 39 கூட்டங்கள் தொடர்ந்து நடாத்தப்பட்டுள்ளதுடன் அக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் தொடர்பான நடவடிக்கைகள், அடைவுகள் பின்வருமாறு.

வழக்குகளில் தாமதம் ஏற்படுவது தொடர்பாகவும், தற்போதுள்ள நடைமுறைகள் தொடர்பான பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாகவும், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தொடர்பாகவும், பொதுமக்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்கள் மூலம் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் மனுக்கள் மற்றும் கோரிக்கைகளை உடனடியாக விசாரித்து தீர்வு வழங்கப்பட நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. 2020 ஆம் ஆண்டில், நீதிச் சேவை ஆணைக்குழு அத்தகைய 1000 க்கும் மேற்பட்ட மனுக்கள் தொடர்பான முடிவுகளை வழங்கியுள்ளது, மேலும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட 58 க்கும் மேற்பட்ட கோரிக்கைகளுக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் கருத்து மற்றும் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளது.

- நீதிமன்றங்களில் இருந்து வழக்குகளின் புள்ளிவிவரங்களை வரவழைத்து, வழக்குகளின் தாமதத்தையும் நெரிசலையும் குறைக்க, அதிக எண்ணிக்கையிலான வழக்குகளைக் கொண்ட சுற்றுலா நீதிமன்றங்களை நிரந்தர நீதவான் நீதிமன்றங்களாகவும், குற்றவியல் வழக்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் நிரந்தர நீதவான் நீதிமன்றங்களை குற்றவியல் மற்றும் குடியியல் வழக்குகள் இரண்டிற்கும் பயன்படுத்தப்படும் இணைந்த நீதிமன்றங்கள் (மாவட்ட· நீதவான் நீதிமன்றங்கள்) நிறுவுதல் மற்றும் வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், இணைந்த நீதிமன்றங்களை இணைந்த நீதிமன்றங்களாக குறித்து பரிசீலித்து செயல்படுவது பலனளிக்காது என தீர்மானிக்கப்பட்டுள்ள, அவற்றை நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் என தனித்தனியாக நிறுவுதல் (எ.கா. தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்தை இணைந்த நீதிமன்றமாக நிறுவுதல்)

- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டிற்கான தீவிலுள்ள அனைத்து மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளின் புள்ளிவிவரத் தரவு பின்வருமாறு,

2019 மற்றும் 2020 ஆண்டுகளைப் பொறுத்தவரை வழக்குகளின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள்



	சிவில் வழக்குகளின் எண்ணிக்கை	குற்ற வழக்குகளின் எண்ணிக்கை	தீர்ப்பதற்கு வழக்குகளின் எண்ணிக்கை	கூப்பிடுவதற்கான வழக்குகளின் எண்ணிக்கை	மொத்த வழக்குகளின் எண்ணிக்கை
2019 ஆண்டு	233,322	474,429	151,638	554,105	707,751
2020 ஆண்டு	244,406	583,094	149,552	677,948	827,500

- **2020 முதல் பாதியில் இருந்து நிலவும் கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையில் நீதிமன்ற நடவடிக்கைகளை சாதாரணமாக நடத்த இயலாமை காரணமாக ஒட்டுமொத்தமாக, 2019 ஆம் ஆண்டை விட 2020 ஆம் ஆண்டில் வழக்குகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.**

- காலதாமதமான தீர்ப்புகள் / கட்டளைகளை வழக்குகள் மற்றும் மேற்கூறிய சுற்றறிக்கைகளின் விண்ணப்பம் தொடர்பாக தேவையான முடிவுகளை விரைவாக முடிக்கும் நோக்கத்துடன் நீதிபதிகளின் ஒரு வருட சம்பள உயர்வு தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச தீர்ப்புகள் / கட்டளைகளின் எண்ணிக்கையை சுற்றறிக்கைகளை நீதிச்சேவை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. COVID 19 தொற்றுநோய் சூழ்நிலையை

எதிர்கொள்ளும் வகையில், முடிவுகளை எடுப்பதற்கும் அதற்கேற்ப நீதிபதிகளின் செயல்திறனை மதிப்பீடு செய்துள்ளது.

- குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விரைவுபடுத்தும் செயன்முறையை வலுப்படுத்த வழக்குகள் அதிகமாக காணப்படும் நீதிமன்றங்களுக்கு முடிந்தவரை அனுபவம் வாய்ந்த நீதிபதிகளை நியமித்தல்.

- நீதிமன்றங்களில் நீதிபதிகளின் வெற்றிடங்கள் நிலவாமலிருப்பதற்காக நீதிமன்ற உத்தியோகத்தர் II வகுப்பு I ம் தரத்துக்கான புதிய நீதிமன்ற உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோருதல் மற்றும் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல். அரசசேவை ஆணைக்குழு, பொலீஸ் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் மேல்முறையீட்டு அதிகார சபையான நிர்வாக மேன்முறையீட்டு அதிகார சபையின் தலைவரை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

- நீதிபதிகளின் அறிவையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கும் மனோபாவத்தை வளர்ப்பதற்கும் நிறுவப்பட்ட நீதிபதிகள் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிகள், பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றுக்கு பொருத்தமான நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தல்.

- ஏனைய மாநாடுகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றுக்கு பொருத்தமான நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தல்.

- நீதிபதிகளுக்கு உரிய பதவி உயர்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டு ஊதிய உயர்வுகள் முறையாக வழங்கப்பட்டு, சேவை மூப்பிற்கேற்ப பணி நிலையங்களை ஒதுக்கீடு செய்து, அலுவலக குடியிருப்பு மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்கள் போன்ற பிற வசதிகளை வழங்குவதன் மூலம், அவர்களின் சேவையின் சிறந்த பலனைப் பெறும் நோக்கத்துடன் திருப்தியை கொண்டு வரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- நீதிமன்ற வளாகத்தில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வழக்குப் பொருட்களை விரைவாக அப்புறப்படுத்துதல் தொடர்பான சுற்றறிக்கை எண் 422 ஐ வழங்குதல் மற்றும் இசைவு நடவடிக்கைகள், உரிய வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தல், மேலும் வழக்குப் பொருட்களை ஏலம் விட அனுமதி அளித்து, குற்றவியல் நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதன் மூலம், ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 05 ஏலங்களை நடாத்துவதற்கு அனுமதி வழங்குதல்.

- 11·09·2018 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட (அரச வர்த்தமானி இல. 2088/26) புதிய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச அலுவலர் சேவை பிரமாணக் குறிப்பின்படி அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையை உரிய காலத்தில் நடாத்துதல், உரிய திட்டத்தின்படி இடமாற்றங்கள் செய்தல் மற்றும் அவை தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை துல்லியமாகவும் வினைத்திறனுடன் நடாத்துதல்.

- அதன்படி, 2020ல்,
  - நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம் III 47,
  - நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III 76,

- நீதிமன்ற தட்டெழுத்தாளர் தரம் III 47, ஆகியோர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு சேவைக்கும் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் என அனைத்து பரீட்சைகளும் பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செய்து முடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி 2020 ஆம் ஆண்டில் 19 நீதிமன்ற பதிவாளர்கள் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். மற்றும் 27 நீதிமன்ற உரைபெயர்ப்பாளர்கள் தரம் I இற்கும் , 482 நீதிமன்ற எழுதுனர்கள் தரம் I இற்கும், 89 நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்கள் தரம் I இற்கும், 83 நீதிமன்ற தட்டெழுத்தாளர்கள் தரம் I இற்கும், 5 நீதிமன்ற புத்தக கட்டுனர்கள் தரம் I இற்கும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

- அரசியலமைப்பின் 111 "ஏச்" உறுப்புரைக்கு இணங்க ஒழுக்காற்று விசாரணைகளை விசாரிப்பதற்கும் வழங்குவதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட முறையான நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய நீதிச் சேவை ஆணைக்குழுவானது, நீதிபதிகள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகப் பெற்ற முறைப்பாடுகள் (ஒழுக்காற்று நடவடிக்கைகள்) மீது அவதானம் செலுத்துகின்றது.
- அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற நீதிபதிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தயோகத்தர்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக ஆரம்ப விசாரணைகள் 34 நடத்தப்பட்டு அவற்றில் 18 விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு, 22 முறைசார் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் 16 விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- நீதிமன்ற தன்னியக்க செயற்றிட்டத்தின் தலைமை நிலைக்குழுவை மீள ஆரம்பிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.
- உயர் நீதிமன்றங்கள், வணிக உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய மன்றின் தலைவர்கள் ஆகியவற்றுக்கு USAID உடன் இணைந்து தனி நீதிமன்றப் பயன் வழக்கு முகாமைத்துவ முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- நீதிச் சேவை ஆணைக்குழு செயலக வளாகத்தில் பத்திரத்தைப் பெறுதல்.

புதிதாக நிறுவப்பட்ட நீதிமன்றங்களுடன் ஒப்பிடுகையில், நீதிச்சேவை ஆணைக்குழுவில் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பணிக்குழாமிலும் பணியாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. மேலும், பழைய நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகக் கட்டடம் பழுதடைந்த மற்றும் மோசமான நிலையில் உள்ள நிலையில், புதுப்பிக்கப்படாமல், பழைய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் கொள்கலன் பெட்டிகள் அடங்கிய தற்காலிக வளாகத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம் செயல்பட்டு வருகிறது. எனவே பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் நீதிச் சேவை ஆணைக்குழு பல்வேறு பணிகளையும் கவனித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

COVID 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் பொது சுகாதார வழிகாட்டுதல்களை (எ.கா. சமூக இடைவெளியை பராமரித்தல்) அந்த தற்காலிக வளாகத்தில், இடவசதி மிகவும் குறைவாகவே பின்பற்றுவது பெரிய சவாலாக இருந்தது. ஆனால் இத்தகைய சவாலான சூழ்நிலையின் மத்தியிலும் மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

2.2 நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற, பின்பற்ற வேண்டிய படிகள்.

- நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் அனைத்து நீதிமன்றங்களும் மற்றும் நீதியை நிலைநாட்டும் நிறுவனங்களையும் மேற்பார்வை செய்வதற்காகவும் அவற்றின் நிர்வாகத்தை நடாத்தி செல்வதற்காகவும் , 2020 இல் பயன்படுத்தப்பட்ட கருவிகளையே மேலும் பயன்படுத்துதல்.

- தீர்ப்பளிப்பதற்கு தாமதமாகின்ற மற்றும் காலங்கடந்த வழக்குகள் உள்ள நீதிமன்றங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து அவ்வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்குரிய விசேட நடவடிக்கைகளை எடுத்தல்.

- மிக பழைய வழக்குகளை அடையாளம் காணவும், நீதிமன்றங்களில் தினசரி விசாரணைகளில் இந்த வழக்குகளை முன்னுரிமைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளைத் தயாரித்தல்.

- தொழில் நியாய சபையின் செயலாற்றுகைகளை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான செயலாற்றுகை ஆய்வு ஒன்றை உருவாக்குதல்.

- நீதித்துறை அதிகாரிகளின் பதவியில் வெற்றிடங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக தேவையான அளவு நீதித்துறை அதிகாரிகளை வருடாந்தம் சேவையில் இனணத்துக் கொள்வதற்கு தேவையான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் தகுதியுடையவர்களினால் அவ் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைக்குரிய அரச உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

- நீதிமன்றங்களில் பணிபுரியும் அரச அலுவலகர்களின் அறிவு மற்றும் வினைத்திறன்களை மேம்படுத்துவதற்காக தற்போது நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ந்தும் நடாத்துதல் மற்றும் மேலதிக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.

- நீதிமன்றங்களுக்கு புதிதாக நிறுவப்படவேண்டிய புதிய கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் தேவையான பௌதீக தேவைகள் வழங்கப்பட்டவுடன் தேவையான நீதிபதிகளையும் பணியாட்தொகுதிகளையும் நியமிப்பதன் மூலம் வழக்குகளின் விசாரணைகளை ஆரம்பித்தல்.

- நீதிமன்ற தானியங்கி செயல்முறையை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

பகுதி– III

2020 ஆம் ஆண்டிற்கான நிதி மதிப்பாய்வு அறிக்கை

ஏசீஏ- எப்

2020 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2020		குறிப்பு	உண்மை நிலை 2020	2019	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானம் பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		89,266,000	64,746,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		72,006	121,863	ஏசீஏ-4
	முற்பணக் கணக்குகள்		2,747,311	6,360,608	ஏசீஏ-5
	ஏனைய பெறுகைகள்		4,231,202	22,124,301	
	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**96,316,519**	**93,352,772**	
	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**96,316,519**	**93,352,772**	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்		-	-	
63,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	61,085,419	59,476,508	
40,260,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	33,111,410	23,581,676	ஏசீஏ-2(ii)
250,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	221,137	244,744	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
104,010,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)**		**94,417,966**	**83,302,928**	
	மூலதனம் செலவினம்				
5,000,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	-	-	
300,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	228,250	2,976,258	
	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
150,000	மனித வள அபிவிருத்தி	14	47,000	211,000	
	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
5,450,000	**மொத்த மூலதனம் செலவினம் (உ)**		**275,250**	**3,187,258**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)		**265,248**	**6,648,146**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		**51,091**	**121,863**	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		**214,157**	**6,526,283**	ஏசீஏ-5
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		**94,958,464**	**93,138,332**	
-	**2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)**		**1,358,055**	**214,440**	

1

முற்பண சீராக்கல் கணக்கு

முற்பண கணக்கிற்கு வரவு வைத்தல் 07012	1,342,783	வேறு தலைப்புக்கள் 306	63,100
வேறு தலைப்புக்கள் 20	161,444		
		முற்பண கணக்கிற்கு பற்று வைத்தல் 07012	116,158
		முற்பண கணக்கிற்கு	1,324,969
	1,504,227		**1,504,227**

முற்பண கணக்கு

முற்பண சீராக்கு கணக்கிற்கு	1324969	மீதி (நிதி நிலைமைக் கூற்று)	1,358,055
திறைசேரிககு அனுப்பிய நிதி	33086		
மீளளிக்கப்படாத முற்பண மீதி			
	1358055		**1,358,055**

2021/02/24

S. M. Eranga Lakmali
Accountant
Judicial Service Commission
Colombo 12.

ஏசீஏ -பீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2020 ரூபா	2019 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	63,671,254	63,443,004
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	5,968,964	8,502,118
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	166,771
மொத்த சொத்துக்கள்		**69,640,218**	**72,111,893**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		5,948,049	8,502,118
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		63,671,254	63,443,004
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்பக் கணக்குகள்	ஏசீஏ-4	20,915	-
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	166,771
மொத்தப் பொறுப்புக்கள்		**69,640,218**	**72,111,893**

பக்க இலக்கம் 01... முதல் 54 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 55. முதல் 62.. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 24/02/2021

H. Sanjeewa Somaratne
Secretary
Judicial Service Commission
Colombo 12

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி
திகதி : 24/02/2021

H. Sanjeewa Somaratne
Secretary
Judicial Service Commission
Colombo 12

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/.ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2021/2/24

S. M. Eranga Lakmali
Accountant
Judicial Service Commission
Colombo 12.

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

ஏ.சே.ஏ - 5

உண்மை

	2020 ரூபா	2019 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	42,175	22,679
ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	1,920,910	19,834,710
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	89,266,000	64,746,000
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**91,229,085**	**84,603,389**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுகொடுப்பனவுகள்	90,442,168	78,027,163
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	221,137	244,744
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	161,444	166,771
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	33,086	7,332
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**90,857,835**	**78,446,010**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**371,250**	**6,157,379**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	3,500	419,150
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**3,500**	**419,150**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய	275,250	3,187,258
முதலீடுகளின் கொள்வனவு	98,000	3,366,571
முற்பணக் கொடுப்பனவுகள்		
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**373,250**	**6,553,829**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(369,750)**	**(6,134,679)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)	**1,500**	**22,700**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	49,591	99,163
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**49,591**	**99,163**
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வைப்புகளின் கொடுப்பனவு	51,091	121,863
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**51,091**	**121,863**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**(1,500)**	**(22,700)**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2020 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2020 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

3.5 வருவாய் சேகரிப்பின் செயல்திறன்

ரூபா. 000

அரசிறை குறியீடு	விபரம்	அரசிறை வருமானம்		சேகரிக்கப்பட்ட வருவாய்	
		மூல மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை ரூபா	இறுதி வருமான மதிப்பீட்டு வீதம்
	பொருத்தமற்றது				

3.6 ஒதுக்கீட்டு பயன்பாட்டின் பரிபூரணம்

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		மொத்த செலவினம்	ஒதுக்கீட்டு பயன்பாட்டின் பரிபூரணம்
	அசல்	இறுதி		
மீண்டும் வரும்	106,610	106,610	94,417.966	88.56%
மூலதனம்	5,450	5,450	275.250	5.05%

3.7 FR 208 ன் அடிப்படையில் இந்த துறைக்கான செலவீனங்களுக்கான ஒதுக்கீடு

ரூபா. 000

தொடர் எண்	எந்த அமைச்சில் இருந்து ஒதுக்கீடு பெறபட்டது	ஒதுக்கீட்டு நோக்கம்			உண்மையான செலவீனம்	இறுதி ஒதுக்கீடு
			அசல்	இறுதி		
	இல்லை					

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையின் செயல்திறன்

ரூபா. 000

சொத்து குறியீடு	குறியீட்டு விளக்கம்	கணக்கெடுப்பு அறிக்கையின்படி இருப்பு 31.12.2019	நிதி நிலை அறிக்கையின் இருப்பு 31.12.2019	இன்னும் கணக்கிடப்படவில்லை	அறிக்கை முன்னேற்றம்
9151	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	2,612,225	2,612,225		
9152	இயந்திரங்களும் உபகரணங்களும்	61,059,029	61,059.029		
9153	காணி				
9154	அருவமான சொத்து		-		
9155	உயிரியல் சொத்து		-		
9160	செயற்பாட்டில் உள்ளது		-		
9180	குத்தகை சொத்து		-		

* தற்போது சட்ட புர்வ உரிமையைப் பெற நடவடிக்கை எடுக்காததினால் நில மதிப்பு மதிப்பீட செய்யப்படவில்லை.

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

* கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட 30.06.2021 தேதியிட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கைக்கு பக்கம் 27ப் பார்க்கவும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. JPA/A/JSC/02/2020/FA/77 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2021 ජූනි 30 දින

ලේකම්,(ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරී)
අධිකරණ සේවා කොමිෂන් සභාව

ශීර්ෂය 07 - අධිකරණ සේවා කොමිෂන් සභාවේ 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.

---

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 මතය

අධිකරණ සේවා කොමිෂන් සභාවේ2020 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය ප්‍රකාශය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශවලින් සමන්විත 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධි විධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධි විධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදි. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව අධිකරණ සේවා කොමිෂන් සභාව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ.ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළයුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

අධිකරණ සේවා කොමිෂන් සභාවේ මූල්‍ය ප්‍රකාශනවලින් 2020 දෙසැම්බර් 31 දිනට අධිකරණ සේවා කොමිෂන් සභාවේමූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය කාර්යසාධනය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශයපොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

